நூலகம் இலக்கியம்

புத்தகச் செய்தி மாத இதழ்

நூலகம் : 1 அக்டோபர், 1995 இலக்கியம் : 2



மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்ட இரு நூற்கள் அனந்தாச்சாரி அறக்கட்டளைப் பரிசு பெற்றன. இதனை பாராட்டி மணிமேகலை பிரசுரம் ரவி தமிழ்வாணனுக்கு எழுத்தாளர் "அக்னி" சிவசங்கரி கேடயம் வழங்கினார்.



நூலகம் இலக்கியம்





மாத இதழ் வெளியீட்டு விழா

நூலகம்
இலக்கியம்

புத்தகச் செய்தி மாத இதழ்

நூலகம்: 1 அக்டோபர் 1995 இலக்கியம் 2

உயிர் நூலகப் பணிக்கு

உடல்— மண்ணின் தீ நாக்குக்கு

—ஆசிரியர்: நூலக ஞானி

தேசிய நூலக விழா 1995
குயிலன் கவிதை—நூலகம்
நூலகம் இலக்கியம்—பிரபலங்கள் கருத்து
அண்ணாவும் படிக்கும் பழக்கமும்
பதிப்பாளர் முல்லை முத்தையா
விரல் நுணி வித்தகர்
வாசகருக்குக் கொண்டாட்டம்
நூலக மாணவக்களுக்குப் போட்டி
அமெரிக்கத் தகவல் நூலகம்
எழுத்தாளர் அறிமுகம் : பி.வி. கிரி
100 ஆண்டு நூலகத்தமிழ் : நூற்றொகை விளக்கம்
எழுததாளர்களுக்குப் பரிசும் பாராட்டும்
கேளுங்கள்
கருத்துப்படம்

இது ஒரு தமிழ் நூலகச் சங்கம் சென்னை வெளியீடு

ஆண்டு சந்தா ரூ 120.

நூலக இலக்கிய வளர்ச்சிக்கு ரூ. 1000 தந்து, புரவலராகி உ.தவவேண்டுகிறோம்.

நூலகம் இலக்கியம்
6, மு,வ. தெரு அரும்பாக்கம்
சென்னை- 600 106. தொலைபேசி: 484 5034

தேசிய நூலக விழா

- 28வது தேசிய நூலக விழா, வருகிற, 1995 நவம்பர் 14—21-... தேதிகளில் இருவார விழாவாக இந்தியா முழுவதிலும் கொண்டாட இருக்கிறோம்.
- ரோஜாவின் ராஜா நேரு. சிறுவர் தினவிழா, நூலக, புத்தக வார விழா, இருவார விழாவாக மாறியது, வளர்ச்சியின் அறிகுறி.
- 1996லேயே, வரும் நவம்பர் பாராளுமன்றக் கூட்டத் தொடரிலேயே, தேசிய நூலகச் சட்டத்தை நிறைவேற்றி, அமுலாக்கிட வேண்டும்.
- சென்னை (தமிழ்நாடு) பொது நூலகச் சட்டம் 1948—நடைமுறைக்கு வந்த ஆண்டு 1950, ஏப்ரல்
- இந்தியாவில், முதல் பொது நூலகச்சட்டத்தை இயற்ற படாதபாடுபட்ட நூலகத் தந்தை சீர்காழி இராமிர்த ரங்கநாதனின் இமாலயச் சாதனையாகும் இது.
- வருங்கால இந்திய சமுதாயம் கலசார பயன்பெற, இந்திய தேசிய நூற்றொகை (INDIAN NATIONAL BIBLIOGRAPHY) [I.N.B] காலதாமதமின்றி. தொடர்ந்து வெளிவருவது பயனுள்ள, உடனடித்தேவை என மத்திய அரசு உணர்ந்து செயல்பட வேண்டும்.
- இப்புத்தக விவர அட்டவணையில் காணும் நூல்களை பார்வை (REFERNCE) புத்தகங்களாக பாதுகாக்க வேண்டும் எல்லா நூல்களையும் தேசிய நூலகங்கள் தொகுத்து, பகுத்து பட்டியலிட்டு, MICRO-FILM மைக்ரோ—பில்மில் பல நூறு ஆண்டுகள் பாதுகாக்கலாம்.
- இதன் பயனாக, பொருள்வாரியாக தமிழ்ப்புத்தக விவர அட்டவணை 1995-ஐ, தமிழர் திருநாளில் 18-1-1996 இல் வெளியிட்டு சாதனை படைக்கலாமே!

□

நூலகம்

கவிஞர் குயிலன்

முன்னர் வாழ்ந்த பெரியோர்—அறிவு
முதிர்ச்சி பெற்ற பெரியோர்
பின்னர் வாழும் நமக்கு—தந்த
பெரிய பரிசு நூல்கள்!



சாத்திரம், விஞ்ஞானம்—சுவை
சார்ந்த நீண்ட காதை
யாத்த இனிய கவிதை—இவை
யாவும் நமக்குச் சொத்து,

அன்று தொட்டு இன்று—வரை
அறிவு வளர்ந்த நிலையை
நன்று காட்டும் நூல்கள்—எந்
நாளு மிருக்கும் செல்வம்.

அறிவுச் செல்வம் சேர்த்து—அவை
அழிந் தி டாது காத்து
பெறுவ தற்கும் நல்கும்—ஞானப்
பீடம் நூல கங்கள்

பள்ளி தேர்ந்த பின்பும் வாழ்வில்
படித்து நிற்கும் போதும்
உள்ளம் கொள்ளை கொண்டு—அறிவை
ஊட்டும் நூல கங்கள்.

—பரிசு (1967) என்ற நூலிலிருந்து
குயிலன் பதிப்பகம் சென்னை—17.

இரங்கற்கூட்டம்

குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர் அமரர் குழந்தை இலக்கியச் செம்மல் நெ.சி. தெய்வசிகாமணி அவர்கட்கு 1-10-95 சென்னையில் இரங்கற்கூட்டம் திரு ஐ.ரா. சுந்தரேசன் (பாக்கியம் ராமசாமி) தலைமையில் நடந்தது.

திருவாளர்கள் வெ. நல்ல தம்பி, நூலகஞானி டாக்டர் பா. பெருமாள், ரேவதி, திருப்பூர் கிருஷ்ணன், சௌந்தர் மாயன், புதுவை முதுபெரும் எழுத்தாளர் ஆகியோர் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டுமெனவும், 1996-இல் சிறுவர் புத்தக விவர அட்டவணையையும் வெளியிடவும் வற்புறுத்தப் பட்டது.

தினத் தந்தி

சென்னைப்பதிப்பு

ஞாயிறு, தினத் தந்தி 24-9-95

வெளியீட்டு விழா

சென்னை, செப். 24– ''நூலகம்'' மாத இதழின் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. பொது நூலக இயக்குநர் கண்ணன் இதழை வெளியிட்டார்.

பூவண்ணன் பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளர் விக்கிரமன் தலைமை தாங்கினார் ''நூலகம்'' ஆசிரியர் டாக்டர் பா. பெருமாள் வரவேற்றார். ''நூலகம், நூற்கள் நூல் பதிப்பாளர்களுக்கு இவ்விதழ் பணியாற்றும்'' என்று அவர் கூறினார். பேராசிரியர் மெய்யப்பன், முத்துக்குமாரசாமி, லெட்சுமி கிருஷ்ணமூர்த்தி. லேனா தமிழ்வாணன் வாழ்த்திப் பேசினார்கள். (ப.29)

'நூலகம்' இதழ் வெளியீடு

சென்னை, செப். 18– 'நூலகம்' இலக்கிய மாத இதழ் வெளியீட்டு விழா சென்னையில் அண்மையில் நடைபெற்றது. (14-9-95-வியாழன்)

பச்சையப்பன் கல்லூரி நூலகத் துறையின் முன்னாள் தலைவர் பா. பெருமாள் இதன் ஆசிரியர். தமிழ்நாட்டு பொது நூலகத்துறை இயக்குநர் கண்ணன் நூலை வெளியிட்டார்

தமிழ்ப் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் இரா. முத்துக்குமாரசாமி, வாசகர் வட்டம் நூலகம் பதிப்பாளர் லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் மெய்யப்பன், லேனா தமிழ்வாணன், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தலைவர் விக்ரமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ப.2 தினமணி சென்னை

19-9-95

2 எழுத்தாளர்களுக்கு ஆதித்தனார் இலக்கியப் பரிசு

பிரபல எழுத்தாளர்கள் நாரண. துரைக்கண்ணன் மற்றும் தாமரை மணாளனுக்கு, 1995-ஆம் ஆண்டுக்கான ஆதித்தனார் இலக்கியப் பரிசு வழங்கப்படுகிறது. இப் பரிசு தலா ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசைக் கொண்டது.

தினத்தந்தி நிறுவனர் சி.பா. ஆதித்தனார் நினைவாக ஆண்டுதோறும் ரூ.1 லட்சம் இலக்கியப் பரிசு வழங்கப்படும் என்று அதன் இயக்குநர் பா. சிவந்தி ஆதித்தன் அறிவித்திருந்தார். இந்த 1995 முதல் அப்பரிசு அளிக்கப்படுகிறது.

தமிழுக்கு அருந் தொண்டாற்றி வரும் முதறிஞர் என்ற வகையில் நாரண. துரைக்கண்ணனுக்கும் பொதிகைக் பூங்குயில் என்ற நாவலுக்காக தாமரை மணாளனுக்கும் அப் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது.

முதிர்ந்த தமிழ் எழுத்தாளரான நாரண. துரைக்கண்ணன் (90) 'பிரசண்ட விகடன் பத்திரிகை ஆசிரியராக நீண்ட காலம் இருந்தவர். செங்கற்பட்டு மாவட்டம் களத்தூரில் பிறந்த அவர். தனது 16 வயதிலேயே எழுதத் துவங்கியவர். 'ஜீவா' என்ற அவரது புனை

"சி. பா. ஆதித்தனார் இலக்கியப் பரிசு" ரூ. 50 ஆயிரத்தை நாவலாசிரியர் தாமரை மணாளனுக்கு நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் வழங்கியபோது எடுத்தபடம்.

பெயராலும் மிகவும் பிரசித்தி பெற்றவர். அவர் எழுதிய நாவல்களில் உயிரோவியம் 'தரங்கிணி' ஆகியவை வாசகர்களைப் பெரிதும் ஈர்த்தவை. உயிரோவியம் நாவலை டி. கே. எஸ். குழுவினர் நாடகமாக்கி தமிழகமெங்கும் நடத்தினர். இப்போது, சென்னை சூளைமேட்டில் வசித்து வருகிறார். எழுத்தாளரும் பத்திரிகையாளரும் திரைப்பட மற்றும் தொலைக்காட்சித் தொடர் இயக்குநருமான தாமரை மணாளனின் (60) இயற்பெயர் ஆர். பாஸ்கரன். வ.உ சி. மாவட்டம் செட்டி குளத்தில் பிறந்த அவர், வாசுகி மாதமிரு முறை இதழின் ஆசிரியராக இருக்கின்றார். அவரது ஆயிரம் வாசல் இதயம், அந்தப்புரம் போன்ற நாவல்கள் குறிப்பிடத்தக்கவை. இதுவரை 42 நாவல்கள் எழுதியுள்ளார். திரைப்படம் ஒன்றையும் 4 தொலைக் காட்சித் தொடர்களையும். தமது எழுத்துக்கா!க தமிழக அரசின் பரிசினை இருமுறை பெற்றுள்ளார். சென்னையில் செப்டம்பர் 27 ம் தேதி நடைபெற்ற ஆதித்தனாரின் 90ஆவது பிறந்த தின விழாவில், இப்பரிசுகளை அமைச்சர் நெடுஞ்செழியன் வழங்குகினார்.

''தினத்தந்தி'' நிறுவனர் சி. பா. ஆதித்தனாரின் 90-வது பிறந்தநாள் இலக்கியப் பரிசளிப்புவிழா சென்னையில். ராணிசீதை மன்றத்தில் நடைபெற்றது. ''ஆதித்தனார் தமிழ் மூதறிஞர் விருது'' ரூ.50 ஆயிரத்தை நாரண. துரைக்கண்ணனுக்கு நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் வழங்கிய போது எடுத்த படம். ''தினத்தந்தி'' இயக்குனர் பா. சிவந்தி ஆதித்தன், மாலைமலர் நிர்வாக இயக்குனர் 'பாலசுப்பரமணிய ஆதித்தன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சி. பாலசுப்பிரமணியன் உடன் இருக்கிறார்கள்

கடிதங்கள்

நூலகம் இலக்கியம் முதல் இதழ் பற்றி... **பிரபலங்கள்** எழுதியுள்ள **கருத்துக் கடிதங்களில்** சில.

அன்புள்ள **ஆசிரியருக்கு...**

பார்த்தேன். படித்தேன் மகிழ்ந்தேன் நூல், நூலகம் பற்றி சிறந்த கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. புதிய நூற்களுக்கு அதிக இடம் ஒதுக்கினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

மிகவும் துணிச்சலான முயற்சி! வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

முனைவர் அ.மா. சாமி
ஆசிரியர், ராணி, ராணிமுத்து
ராணி காமிக்ஸ் சென்னை—30

'நூலகம் இலக்கியம்' முதல் இதழ் அனுப்பியதற்காக நன்றி. நூலகங்கள், நூலகர்கள். மற்றும் புத்தக உலகச் செய்திகளை விரிவாகவும் சுவையாகவும் தருகிறது 'நூலகம்'. சாதனையாளர்களை பாராட்டுவது வரவேற்புக்குரிய நற்பணி தகவல்களும் செய்திகளும் பயனுள்ளவை இவ்விதழ் நல்ல கவனிப்பையும் போதிய ஆதரவையும் பெறவேண்டும். வாழ்த்துக்கள்.

வல்லிக்கண்ணன்

தங்கள் மாத இதழ் நூலகம் இதழ் வெளிவருவது அறிந்து மிகவும் மகிழ்கிறேன். 14.9.95 நடைபெறும் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெறவும், நூலகம் இதழ் மூலம் தமிழகம் பயன்பெறவும் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

வாழ்க வளமுடன்

கவிஞர் **செல்வகணபதி**
கோவை—2

'நூலகம்' முதல் இதழைக் கண்டேன். அருமையாக உள்ளது. பல்வேறு துறைகள் குறித்து அறிஞர் பெருமக்கள் கட்டுரைகள் படைத்துள்ளனர். எல்லாம் பயனுள்ளவை பாது காக்கத் தக்கவை.

புத்தகச் செய்திக்கு ஒரு இதழ் இல்லையே என்னும் ஏக்கத்தைப் போக்க 'நூலகம்' இதழ் வெளிவந்துள்ளது, படைப்பாளர்கள் மத்தியிலே பரவசத்தை உண்டாக்கியிருக்கின்றது.

நூலகம் வளர என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறன்.

—பி.வி.கிரி
சென்னை—102.

நூலகம் இலக்கிய இதழின் முதல் பிரதி கிடைத்தது. தங்களின் இதழ் எனது தொகுப்பில் 1937. ஆவது வகையான இதழாகவும்-1995இல் தொடங்கிய இதழ்களின் வரிசையில் 27 ஆவதுவகையான இதழாகவும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

வெளியாகும்/வெளியான நூல்கள் தொடர்பான. நுட்பமான விமர்சனக் குறிப்புகளையும் அதன்விலை, விலாசம் பற்றியும் குறுப்பிட்டு— (தரமான பலரைக்கொண்டு விமர்சனம் செய்ய வைத்து) அதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து (70% பக்கங்களை அதற்காகவே ஒதுக்கி) இதழ் வெளியாகுமானால் கட்டாயம் ஒரு சாதனை காட்டுவதாக அமையும்.

— பொள்ளாச்சி நசன்

1. அரிய தகவல்களைத்தருகின்ற டைஜெஸ்ட்டாக நூலகம் விளங்குகிறது.

2 நூலகத் துறையில் நெடுங்காலம் தொடர்புடைய தங்களது நுண்மாண்புலமையின் வெளிப்பாடாக இந்த புத்தகச்செய்தி மாத இதழ் பொலிகிறது. அரிய படைப்பு.

3. நூலகம் இலக்கியம் வளர்ந்தோங்க இறைவனை வேண்டுகின்றேன். நன்றி!!

பா.வா. கணபதி
பத்திரிகையாளர் சென்னை—101

தமிழ்நாடு கல்லூரி நூலகர்கள் இன்று ரூ. 11 ஆயிரத்திற்கும் மேல் ஊதியம் வாங்குகிறார்கள் இது தாங்கள் சங்கத் தலைவராக இருந்து சாதித்தது என்பதை ஒவ்வொரு கல்லூரி நூலகர்களும் அறிவார்கள்.

கலியாண சுந்தரம் நூலகர், ஸ்ரீ வைகுண்டம் குமர குருபரர் கலைக்கல்லூரி.

அன்பு நண்பர் டாக்டர் பெருமாள் அவர்களுக்கு,

வணக்கம் பல. நலம். நலங்காணா ஆவல்.

''நூலகம் இலக்கிய'' மாத ஏடு வெளியிடும் அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன் விழா சிறப்புற என் வாழ்த்துக்கள். மலரும் மலர் நூலகப் பயனைப் பெற்று நூலகமும் நூலகரும் பெயன்பெற வெளிவரவேண்டும் என்பது என் ஆவல். அது நிறைவேறும் என்பது உறுதி தங்கள் முயற்ச்சிக்கும் உழைப்பிற்கும் எனது தலைதாழ்ந்த வணக்கங்கள்

கு. பாலசுப்பிரமணியன்
தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்
கழக நூலகர் (ஒய்வு)
கோவை - 46

ஆசிரியர் நினைவு அஞ்சலி

நூலகப் பேராசிரியர் P. கங்காதர ராவ்

தோற்றம்: 16-2-1929 மறைவு : 29-10-1990

அமரர், சென்னைப் பல்கலைக் கழக நூலகத் துறைத் தலைவரும், பேராசிரியருமான பெருந்தகை P. கங்காதரராவ் 1976-இல் M. Lib.Sc., முதுகலை நூலகக்கல்விப் படிப்பை அரும்பாடு பட்டுத்துவக்கினார். 10 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் C.L.I. Sc., படிக்கவழி கண்ட வல்லவர். MULISA-வை துவக்கிய மாமனிதர். அவர் இன்று நம்மிடையே இருந்திருந்தால்...?

அஞ்சலித்தோம்! அஞ்சலித்தோம்!! அஞ்சலித்தோம்!!!

மீ. மனோகரனுக்கு விருது

மீ. மனோகரனின் 'மருது பாண்டி மன்னர்கள்' என்ற நாவலுக்கு எம். ஏ. சிதம்பரம் அறக்கட்டளை சார்பில் ஆண்டு தோறும் வழங்கப்படும் செட்டி நாட்டு அரசர் அண்ணாமலை செட்டியார் நினைவுப் பரிசு கிடைத்துள்ளது விருதுடன் ஐம்பதாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் அளித்து மீ மனோகரன் கௌரவிக்கப்படுகிறார். சுமார் பத்து ஆண்டுகள் ஆய்வு செய்து இந்நூல் உருவாகியிருக்கிறது. மீ. மனோகரனை நூலகம் இலக்கியம் பாராட்டுகிறது.

புத்தகங்கள்

வீட்டில் அலங்காரத்தையும், விசேஷக் கால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பதுபோல, வீட்டிற்கோர் புத்தகச்சாலை சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

—பேரறிஞர் **அண்ணா.**

உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்கள்தான்.

—**கதே**

என் மனதுக்குப் பிடித்த புத்தகங்களை மட்டும் என்னிடம் கொடுத்து என்னை வாழ்நாள் முழுவதும் சிறைப்படுத்தினாலும் நான் வருத்தப்பட மாட்டேன்.

—**மாஜினி.**

புத்தகங்கள் மற்றவர்களை நீங்கள் புரிந்து கொள்ளும்படிச் செய்ய வல்லவை; அதுபோலவே, உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.

—**எட்வர்ட் பிரேக்கர்**

குறிஞ்சிவேலனுக்கு விருது

நூல் மொழிபெயர்ப்புக் கான சாகித்ய அகாதெமி விருதுக்கு தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் குறிஞ் சிப்பாடியைச் சேர்ந்த குறிஞ்சி வேலன் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டார்.

அவர் உள்பட மற்ற மாநிலங்களைச் சேர்ந்த 19 பேருக்கு குடியாகத் தலைவர் சங்கர் தயாள் சர்மா தில்லியில் ஆகஸ்டு 14ம் தேதி விருது வழங் கினார்.

ஞானபீட விருது பெற்ற மலையாள எழுத்தாளர் எஸ். கே. பொற்றேகாட்டின் 'விஷக் கன்யா' என்ற நூலை குறிஞ்சிவேலன் மொழிபெயர்த் தார்.

அதற்காக 1994ம் ஆண்டின் ரூ.10,000 ரொக்கம், பாராட்டுப் பத்திரத்தைக் கொண்ட சாகித்ய அகாதெமி விருதை குடியரசுத் தலைவர் வழங்குகிறார்.

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் குறிஞ்சிப்பாடியைச் சேர்ந்த எழுத்தாளர் குறிஞ்சி வேனுக்கு மொழிமாற்றத்துக் கான சாகித்ய அகாதெமி விருதை அகாதெமி தலைவரும் கன்னட எழுத்தாளருமான யுஆர் அனந்தமூர்த்தி தில்லியில் அண்மையில் வழங்கினார்,

நூலக மொழி: சொல்லும் பொருளும்

பட்டம்மாள் பார்த்தசாரதி பெருமாள்

அமெரிக்க தகவல் நூலகம், கட்டுரை இந்த இதழில் வெளியாகியுள்ளது. கட்டுரையாளர் கல்பனா **Catalogue Cabinet**-ஐ அலமாரி எனக் குறிப்பிட்டுள்ளார்,

தமிழ் நூலகக்கல்விபயிலும் மாணவர்கள் வேறு பதப் பிரயோகத்தை அறிவர்.

நூறு ஆண்டு கண்ட நூலக இலக்கிய வரலாற்றில், பல நூலகப் பிரபலங்களின் பதப் பிரயோகம் என்ன என அறிய முற்பட்டபோது, அவர்கள் பல தமிழ் வார்த்தைகளை பயன் படுத்தியுள்ளனர்.

புத்தக அலாமாரி. சரி நூலக நூற்பட்டி அலமாரி, சரியா? சிந்திக்கும் வேளையில்...

1. இழுப்பறைப்பட்டி
2. செருகு பெட்டி நிலைப்பெட்டி
3. நூற்பட்லியல் பெட்டி (இரா. பெரிய நாயகம்)
4. நூல் பட்டியல் தொகை அட்டைகளயங்கிய பெட்டி (அமரர் பேராசிரியர் அ. திருமலை முத்துசாமி)
5. அட்டை நூலக நூற்பட்டி இழுப்பறை பெட்டி
6. நூல் விவரப்பட்டி பெட்டி
7. அட்டைப்பட்டி பெட்டி

இப்படிப் பல சொல்லாட்சிகள்...

வேண்டுகோள்

இனிவரும் நூலக இலக்கியப்படைப்புகளில் **Catalogue Cabinet**-க்கு சரியான பயனுடைய சொல்லாக எதைக் குறிப் பிடலாம்.

தமிழ்ச் சான்றோர்களே. நூலக முன்னோடிகளே,எழுதுங் கள். மாதா மாதம் நூலகம் இலக்கியம் அலுவலகத்தில் கூடி, விவாதித்து 'நூலகத் தமிழ்' 'நூலக மொழி'—த் தொடரை தொடருவோம்.

சென்னைப் பொது நூலகச் சட்டம்

அமரர் பேராசிரியர் அ. திருமலை முத்துசாமி

தோற்றுவாய்

சென்னை மாநிலத்தில் பொதுநூலகங்களை நிறுவுவதற்கும், விருவான அளவில் கிராமங்களிலும், நகரங்களிலும் நூலகப் பணிகள் நடைபெற ஏற்பாடு செய்வதற்கும் வழி செய்யும் "சென்னைப் பொதுநூலகச் சட்டம்" 1948-ஆம் ஆண்டில் இயற்றப் பெற்றது. இச் சட்டம் 1950-ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்கு மூலகாரணமாக விளங்கிய பெரியார் முன்னர் கல்வி அமைச்சராக விளங்கிய திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் ஆவார்கள் அவர் 1947-ஆம் ஆண்டு சென்னைப் பொதுநூலக மசோதாவினைக் கொண்டு வந்ததோடு அமையாது அடுத்த ஆண்டிலேயே அதைச் சட்டமாக்கினார்.

சென்னை பொது நூலகச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:—

மாநில நூலகக் குழு

மாநில நூலகக் குழு ஒன்றை அமைக்க இந்தச் சட்டம் வகை செய்கிறது. நூலகங்களைப் பற்றி அரசினர்க்கு ஆலோசனை கூறுவது இக் குழுவின் பணியாக இருக்கும். இக் குழுவின் அமைப்பு முறையும் அதன் அதிகாரங்களும், கடமைகளும் அவ்வப்போது நிருணயிக்கப்படும்

இயக்குநர்

மாநிலப் பொதுநூலக இயக்குநர் ஒருவரை அரசாங்கம் நியமிக்கும். இவர் அரசினரால் அமைக்கப்படும் ஒரு மத்திய நூலகத்தை அல்லது ஏற்கெனவே மத்திய நூலகமாக அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஒரு நூலகத்தை அதன் கிளைகளோடு சேர்த்து நிருவகித்து வருவார். பொதுநூலகங்கள் தொடர்பான எல்லாக் காரியங்களையும் ஆணையிடுவதும், அவற்றை மேற்பார்வையிடுவதும் இயக்குநரின் பொறுப்பாகும். இந்தச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பெறும் விதி

முறைகளுக்கிணங்க, அரசினரின் உதவி பெறுவதற்கு உகந்த நூலகங்கள் எவை எவை என்பதை இயக்குநர் அறிவிப்ப துடன், அவை தொடர்புடைய காரியங்களையும் ஆணையிட்டு அவற்றை மேற்பார்வையிடவும் செய்வார் இச் சட்டத்தின் கீழ் நிறுவப்படுகின்ற எல்லா பொதுநூலக ஆணைக் குழுக்க ளையும் (Local Library Authorities) அவரே கண்காணிப்பார். பொதுநூலகங்கள் செயல்பட்டு வரும் விதம் குறித்து ஆண்டு தோறும் அறிக்கை ஒன்றை அவர் அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

நூலக ஆணைக் குழுக்கள்

பொது நூலகங்களை அமைத்து நிருவகிப்பதற்காக மாவட்டந்தோறும் நூலக ஆணைக் குழு அமைக்கப்படும். சென்னை நகருக்குத் தனியாக ஒரு நூலகக் குழு அமைக்கப் பெறும். சென்னை நகருக்கான நூலக ஆணைக் குழுவில் 12 உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள் இவர்களில் மூவரை சென்னை மாநகராட்சி மன்றம் அதன் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் எட்டு உறுப்பினர்களை அரசாங்கம் நியமிக் கும். இவ் வெண்மலரில் மூவர் சென்னை நகர எல்லைக்குள் உள்ள அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட நூலகங்களின் நிருவா கிகளாக இருப்பார்கள்; இருவர் நகருக்குள்ளிருக்கும் உயர் நிலைப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியைகளாக இருப்பார்கள். ஒருவர் நகரிலுள்ள கல்லூரி ஒன்றின் முதல்வராயிருப்பார். பன்னிரண்டாவது உறுப்பின ரானவர், அரசினர் அவ்வப்போது குறிப்பிடும் ஒரு பதவியை வகிப்பவராக இருப்பார். இவர் இக் குழுவின் செயலாளரா கவும் இருந்து வருவார்.

ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவிலும் பின் வருவோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்:—

1. மாநிலப் பொதுநூலக இயக்குநரால் நியமிக்கப்படும் 10 உறுப்பினர்கள். இவர்களில் மூவர், அந்த மாவட்டத்தி லுள்ள, அரசினர் அங்கீகாரம், பெற்ற நூலகங்களின் நிருவாகி களாக இருப்பார்கள். ஐவர் அந்த மாவட்டத்திலிருக்கும் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியைகளாகவோ அல்லது கல்லூரி முதல்வர்களாகவோ இருப்பார்கள்.

(தொடரும்)

With best compliments from :

GANESH TRAVELS

TOURIST TRANSPORT OPERATORS

(RECOGNISED BY GOVT. OF INDIA)

ALL TYPES OF A/C & NON A/C
CARS & VANS ON HIRE BASIS

24 HOURS PERSONALISED SERVICES

Roadworthy Vehicles and Trustworthy Drivers

MADRAS HEAD OFFICE

35/1 PCO ROAD
EGMORE MADRAS - 600 008.

Phone : 8252345 8250066 8254243; 8250202 8254444

தமிழ்ச் சான்றோர் பேரவை

செய்தி

1995 நவம்பர், 1, 2 புதன் வியாழக்கிழமைகளில், சென்னை இராதா கிருட்டிணன் சாலை, ஏ. வி. எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் முதல் நாள் மாலை பேரணியுடன் தமிழகப் பெருவிழா நடைபெறவுள்ளது.

தமிழ் உணர்வைப் பயன்படுத்தி, தமிழையும் தமிழனையும் வாழவைப்போம்.

Edited and Published by Noolaga GNANI Dr. Pa. PERUMAL, M.A., M.Lib. Sc., Ph. D; from 6, Mu. Va. Street, Arumbakkam, Madras-600 106 Phone No. 48450 4 Printed by P. Aiyasamy Thirumalai Deivam Art Printers, 14, Yadaval Street, Aminjikarai, Madras-600 029.

பேரறிஞர் அண்ணாவும் படிக்கும் பழக்கமும்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த சமயம் அவர் ஒரு தடவை சென்னைக்கு வந்திருந்தார். இங்கே சில முக்கிய நிகழ்ச்சிகள்லே கலந்துக்கறதுக்காக வந்திருந்தார். ஆளுநர் மாளிகையிலே ஒருநாள் இரவு தங்கி மறுநாள் புது டெல்லிக்குப்புறப்படுதாக ஏற்பாடு; நிகழ்ச்சிகளையெல்லாம் முடிச்சிக்கிட்டு ஆளுநர் மாளிகையிலே தங்கியிருக்கார்.

அன்றைக்கு இரவு படிக்கறதுக்கு ஒரு முக்கியமான புஸ்தகம் அவருக்குத் தேவைப்பட்டுது.

அந்த சமயத்துலே உலக அளவுலே ஒரு முக்கியமான பொருளாதாரம் சம்பந்தமான ஒரு புஸ்தகம் வெளியாகியிருக்கிற விஷயம் அவருக்குத் தெரியும்.

''அந்தப் புஸ்தகம் மெட்ராசுக்கு வந்திருக்குமா? அது இங்கே கிடைக்குமா?'' ன்னு விசாரிச்சார் நேருஜி. அவர் இப்படி கேட்டவுடனே அங்கே இருந்தவங்கள்ளாம் ரொம்ப பரபரப்பா செயல்பட ஆரம்பிச்சாங்க முக்கியமான இடங்கள்லேயெல்லாம் விசாரிச்சாங்க 'அந்தப்புத்தகம் உங்ககிட்டே இருக்கா?'ன்னு!

சென்னையிலே உள்ள கன்னிமாரா நூல் நிலையத்துக்கு எப்படியும் அந்தப் புத்தகம் வந்திருக்கும்னு ஒரு நம்பிக்கை. அங்கே விசாரிச்சாங்க... அந்த புத்தகம் ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் அங்கே வந்திருக்கு-ங்கற விஷயம் தெரிஞ்சிது!

உடனே எல்லாரும் அங்கே ஓடினாங்க... அவங்களுக்கு இன்னொரு சந்தேகம்!

''புத்தகம் வந்திருக்கு . சரி அதை இந்த சமயத்துலே வேறே யாரும் படிக்கறத்துக்கு எடுத்துக்கிட்டுப் போயிருக்கப் புடாதே...!''

இருந்தாலும் மனக்குள்ளே ஒரு தைரியம்... இப்படி ஒரு

''புத்தகத்தை கையில் எடுத்தால் தான் தூக்கம் வரும்''

புஸ்தகம் வெளிவந்திருக்கிற விஷயமே நேருஜி சொல்லித் தான் நமக்கே தெரியும்...!

அதுவுமில்லாமே உலகப் பொருளாதாரம் சம்பந்தமான ஏதோ ஒரு புஸ்தகம் அது... அதைப் போய் இந்த நேரத்துலே அவ்வளவு ஆர்வமா யாரு எடுத்துக்கிட்டுப் போயிருக்கப் போறாங்க... அப்படிங்கற தைரியம். இந்தத் தைரியத்தோட அந்த நூல் நிலையத்துக்கு ஓடினாங்க... புஸ்தகத்தைத் தேடினா... அது கிடைக்கலே!

யாரோ எடுத்துக்கிட்டுப் போயிருக்காங்க!

நேருவுக்கு மட்டுமே தெரிஞ்சிருந்த அந்தப்புஸ்தகம் பத்தின விஷயம் மெட்ராசுலே வேறே ஒருத்தருக்கும் தெரிஞ்சிருக்கு!

உடனே எல்லாரும் பரபரப்பா ரிஜிஸ்டரைப் புரட்டினாங்க. எடுத்துக்கிட்டுப்போனவங்க அதுலே கையெழுத்தும் போட்டிருப்பாங்கள்லே... அதைப் பார்த்து யாருன்னு தெரிஞ்சிக்கலாம்ங்கறதுக்காக!

அதோ... அந்தப் புத்தகத் தோட பேரு... பக்கத்துலே அதை எடுத்துக்கிட்டுப் போன வங்க கையெழுத்து... உத்துப் பார்க்கறாங்க எல்லாரும்... அதுலே... சி. என். அண்ணா துரை-ன்னு எழுதியிருந்தது. அவர் தான் பேரறிஞர் அண்ணா!

நேரு படிக்க விரும்பிய ஒரு புத்தகத்தை அதே நேரம் படிக்க விரும்பிய இன்னொரு தலைவர் இவர், படிக்கறதுலே அவருக் கிருந்த ஆர்வத்தை நாடு தெரிஞ் சிக்கணும்ன்னா அதுக்கு எவ் வளவோ சம்பவங்கள் இருக்கு!

கடைசி காலத்துலே அவர் அடையாறு மருத்துவமனை யிலே படுத்திருக்கார்.

அவருக்கு ஒரு முக்கியமான அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கு- அவசரமா!

அமெரிக்காவுலே இருந்து டாக்டர் மில்லர் வந்திருக்கார். அவருகிட்டே கேட்கிறார்.

"டாக்டர்! நாளைக்கே அறுவை சிகிச்சை செய்யப் போறீங்களா?" அப்படின்னு!

"ஆமாம்!" —ங்கறார் டாக்டர் மில்லர்.

"நாளை மறுநாள் செஞ்சுக் கறேனே!"-ங்கறார் அண்ணா.

"ஏன்... ஏதாவது நாள் பார்க்கறீங்களா?" ங்கறார் அவர்.

"இல்லை... ஒரு புத்தகத் தைப்படிச்சிக் கிட்டிருக்கேன்... அதை நாளைக்குள்ளே முடிச் சுடுவேன்...அதுக்கப்புறம் நான் இறந்தாலும் கவலை இல்லே!" ன்னார்.

அவர் தான் அறிஞர் அண்ணா.

சங்க கால நூல்கள்லே யிருந்து சமீபத்திய நூல்கள் வரை எல்லாம் அவர் படிச்சிருக் கார்.

ஒரு திருமணவிழாவுலே அவர் பேசும்போது சொன்ன விஷயம் இது.

சங்க காலத்துலே காதலியை மணக்க விரும்புகிற வனுக்கு அவனுடைய தந்தை வீரச்சோதனைகள்லாம் வைப் பார் 'போய் புலிப்பல் கொண்டு வா... அப்போதான் என் பெண்ணைத் தருவேன்!'ம்பார்.

காதலன் உடனே காட்டுக் குப் போய் ஒரு புலியைக் கொன்று, அதன் பல்லைக் கொண்டு வருவான், அதை வீரப்பதக்கத்தில் பதித்து அவ னுக்கு மாமனார் சூட்டுவார்— கல்யாண சமயத்துலே!

இப்போ வெல்லாம்... காதலன்கிட்டே, "காட்டுக்குப் போய் புலிப்பல் கொண்டு வா!"ன்னு சொன்னா... புலி தான் மாப்பிள்ளையா வரும்!" அப்படின்னார்.

பாரதிதாசன் புத்தகங்களை பதிப்பித்த முல்லை முத்தையா (1920-)

- 1920ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7ஆம் நாளில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் தேவகோட்டை-யில் முல்லை முத்தையா பிறந்தார்.
- பெற்றோர் பெயர்: பழநியப்பர் - மனோன்மணி ஆச்சி.
- வித்துவான் நாகப்ப செட்டியாரை தந்தையாரை ஈன்ற தாத்தாவாகவும், அஷ்டாவதானம் சிவசுப்பிரமணிய செட்டியார் அவர்களைத் தாயை ஈன்ற தாத்தாவாகவும் பெற்ற நல்ல தமிழ்ப் பரம்பரையில் தோன்றியவர்.
- உயர்நிலைப் பள்ளி படிப்பு வரை படித்தவர். இரண்டு ஆண்டுகள் சமஸ்கிருதம் பயின்றவர்,
- 1943இல் முல்லை பதிப்பகத்தை உருவாக்கி பாவேந்தர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு, பாண்டியன் பரசு, நல்ல தீர்ப்பு, காதல் நினைவுகள், தமிழியக்கம் உள்பட பன்னி ரண்டுக்கும் மேற்பட்ட பாவேந்தர் நூல்களை அழகுற வெளியிட்டு நாடெங்கிலும் பரப்பியவர்.
- பாவேந்தரை ஆதரவாளராகக் கொண்டு 'முல்லை' என்ற இலக்கிய மாத இதழை நடத்தி உள்ளார்.
- பஞ்சாயத்து நகராட்சி நலனுக்காக 'நகரசபை' என்ற மாதம் இருமுறை இதழை வெளியிட்டுள்ளார்.
- 'பஞ்சாயத்து நிர்வாகம்' பற்றி ஒன்பது நூல்கள் எழுதி அரசு பரிந்துரையும், அமைச்சர்கள் பாராட்டுரையும் பெற்றவர்.

- உலகப் புகழ் பெற்ற நாவல்களான அம்மா, அன்னா கரீன்னா, மேடம்பவாரி,பெண் வாழ்க்கை உள்பட பத்துக்கும் மேற்பட்ட நாவல்களை தமிழில் மொழிபெயர்த்து புது முறையில் சுருக்க பதிப்பாக வெளியிட்டுள்ளார்.

- புதுச்சேரியில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு வீடு வாங்கிக் கொடுத்துள்ளார். (அதுவே தற்போது புதுச்சேரியில் அரசு அருங்காட்சியமாக திகழ்கிறது.)

- தமிழ்நாடு பதிப்பாளர் சங்கத்தைத் தொடங்கி அதன் செயலாளராக இருமுறை இருந்து பணியாற்றி உள்ளார்.

- **முன்நூறுக்கும்** மேற்பட்ட இருவருடைய நூல்களை பல் வேறு பதிப்பகங்கள் வெளியிட்டுள்ளனர்.

- அண்ணா, பாரதிதாசன், திரு வி.க., ச சோ.பாரதியார், ரா.பி. சேதுப்பிள்ளை, புதுமைப்பித்தன், பரலி நெல்லையப்பர், வ.ரா, தி.ஜ.ர., கொத்தமங்கலம் சுப்பு, நாரண துரைக்கண்ணன், கண்ணதாசன் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார்.

முல்லை முத்தையா பெற்ற விருதுகளும் பட்டங்களும்

- பாவேந்தர் பாரதிதாசன் நூல்களை முதன் முதலில் அழகாகப் பதிப்பித்து வெளியிட்டதற்காக 1979இல் எம் ஜி.ஆர் தலைமையிலான தமிழக அரசு நடத்திய பாவேந்தர் விழாவில் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள் முல்லை முத்தையாவுக்கு பட்டாடை அணிவித்து ஆயிரம் ரூபாய் பரிசும் விருதும் அளித்தார்.

- 1978இல் சாய் சர்வீஸஸ் நிறுவனத்தார் முல்லை முத்தையா உரை எழுதிய 'கந்தர் அலங்காரம்' நூலை கந்தசாமி கோயிலில் வெளியிட்டு, பட்டாடை அணிவித்து நிதி அளித்தனர்.

- 1982இல் திராவிடர் கழக இலக்கிய அணி நடத்திய பாவேந்தர் விழாவில் தமிழர் தளபதி கி. வீரமணி தலைமையில் கலைஞர் கருணாநிதி சால்வை அணிவித்து பாராட்டி பேசினார்.

- 1985இல் தமிழக அரசின் 'திருக்குறள் நெறி பரப்பு மையம்' நடத்திய விழால் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், திருக்குறளார் முனுசாமி தலைமையில் நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் 'திருக்குறள் நெறித் தோன்றல்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார்.

- 1987இல் குளித்தலை தமிழ்க் கா. சுவின் நூற்றாண்டு விழாவில் 'பாவேந்தர் சீர்பரவுவார்' என்ற பட்டத்தை வழங்கியது.

- 1990இல் தமிழக அரசும், திருச்சி பாரதிதாசன் பல்கலையும் இணைந்து நடத்திய பாவேந்தர் நூற்றாண்டு தொடக்க விழாவில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் முல்லை முத்தையாவின் பதிப்புப் பணிகளைப் பாராட்டி ரூ. 10,000/- பரிசும் 'பாவேந்தர் விருதும்' பட்டாடையும் அணிவித்து கௌரவித்தார்.

- 1991இல் திருச்சி நகரத்தார் சங்கம் 'பாவேந்தர் விருது' பெற்றமைக்காக பாராட்டுவிழா நடத்தியது.

- 1993ல் நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் வி.ஜி.பி. விருதும் ரூ. 1000/- பரிசும் வழங்கி கௌரவித்தார்.

- 1993இல் 'வள்ளுவர் வழி' வாசகர் வட்டம் நடத்திய விழாவில் தஞ்சைப் பல்கலை முன்னாள் துணைவேந்தர் சி. பாலசுப்பிரமணியம் 'திருவள்ளுவர் சீர் பரவுவார்' என்ற விருதை வழங்கினார்.

மகளிர் நூலகம்

பெண்களுக்காக பெண்களே நடத்தும் பெண்கள் நூலகம் இந்த ஆண்டில் சென்னை, கோவை, சேலம், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படும். படிப்படியாக இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

சென்னை மாவட்ட மைய நூலகத்திற்கு ரூ.2.75 கோடி செலவில் பல அடுக்கு மாடிக் கட்டடம் நவீன வசதிகளுடன் கட்டப்படும். தமிழ்நாடு ஆவணக் காப்பக வளாகத்தில் ரூ.25 லட்சம் செலவில் நூலகக் கட்டடம் அமைக்கப்படும். இவ்வாண்டில் இதற்காக ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நூலகக்கல்வி மாணவர்களுக்கு

பரிசு ரூ. 100

நூலகத் தந்தையின் கடிதம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதில் நூலகம் இதழுக்கான கோலன் பகுப்பெண் உள்ளது.

அந்த என் சரியா? சரி என்றால் விளக்கவும். தவறு என்றால், சரியான பகுப்பெண் என்ன? 15-11-95க்குள் வந்து சேரும் வாசகர்களின் விளக்கம், பரிசுக்கு ஏற்றுக்கொள்ளப் படும், சரியான விடையை பலர் எழுதியிருப்பின், குலுக்கல் முறையில் ஒருவருக்கு பரிசு வழங்கப்படும்.

From

S. R. Ranganathan,
M.A., L.T., D.Litt., F.L.A.
National Research Professor in
Library Secince
D.R.T.C. Bangalore.

To.

Shri P. Perumal,
Librarian,
Vaishnar College,
Madras-29.

In reply please quote 2mO33 of 19 November 1969

My dear Perumal,

1. My young friend Shri Gopinath got your address for me.

2. I had been for some time longing to write to you.

3. Your translation of my articles to Noolagam is so lucid and readable. It is this which had been making me long to write to you.

4 In what part of Madras is your college situated? In what part of Madras is Arumbakkam? I ask these silly

questions because, I have been out of touch with Madras for nearly twenty-five years.

5. I find that you are Managing-Editor of Noolagam now. To whom have I to send my papers now for publication? Is it to you or to the office in Mrs Laxmi's house.

6. I have at present a fairly long article whose translation may be published in four or five instalments. It is entitled "Statue of Second Law and Humanism in Library Service". This article is being typed in five different instalments to suit your conditions.

7. Would you like me to send them to you or else to whom?

8. If you so desire, I shall also be glad to send to you copies of articles which I write from time to time to some periodicals in English on request.

9. How long have you been librarian in your college? In which year did you take your B. Lib Sc degree?

10. Is it not possible for you to contact Shri Seshachalam of Curzon & Co and the Kumars of the British Council and do something to put life into the Madras Library Association?

With all best wishes,

Yours sincerely,

Sd/

(S.R. Ranganathan)

மனிதப் பிறவிக்கு அடுத்தாற்போல் இவ்வுலகில் விந்தையான பொருள் புத்தகம்தான்.

—சிங்கஸ்லி.

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் அறிஞர்களின் கருவூலங்களே புத்தகங்கள்.

—ஜோசப் அடிசன்

விரல் நுனி புத்தக விவர விற்பன்னர்

கா. சு. மணியன்

தமிழகத்தின் பிற பகுதிகளில் போதிய வரவேற்பில்லை என்று சொல்லப்படும் புத்தக விற்பனையைக் கோவையில் பெரும் வெற்றியோடு நடத்தி விற்பனையில் சாதனை படைத்திருப்பவர் விஜயா பதிப்பகத்தின் உரிமையாளர் மு. வேலாயுதம். அக்டோபர் 2 முதல் அவர் கோவையில பெரியகடை வீதியிலுள்ள மாவட்ட நூலகக் கட்டிட வளாகத்தில் இவர் நடத்தும் புத்தகக் கண்காட்சியில் 25,000 புத்தகங்களுக்கு மேல் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 1976-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தேசிய நூலக வாரத்தை ஒட்டி புத்தகக் கண்காட்சியினை மு. வேலாயுதம் நடத்தி வருகிறார். இந்த ஆண்டு கண்காட்சியோடு ''வாசகர் திருவிழா'' ஒன்றையும் இணைந்து நடத்தி அதில் பத்திரிகையாசிரியர்கள் சந்திப்பு, குழந்தை இலக்கிய விழா, கொங்கு நாட்டுப் படைப்பாளிகள் தினம், ஓவியர்கள் தினம் போன்ற நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறார்.

தன்னிடம் விற்பனைக்குள்ள நூல்களைப் பற்றிய விவரங்களை விரல் நுனியில் தெரிந்து வைத்திருக்கும் இவர் தன்னிடம் வரும் வாசகருக்கு அவர் விரும்பும் நூலைப் பற்றிய விபரச் சுருக்கத்தை மனம் கவரும் விதத்தில் சொல்லிவிடும் இருவருக்கு ஏராளமான எழுத்தாள நண்பர்கள். புத்தக வியாபாரத்தில் மட்டு மன்றி, எழுத்தாளர்களின் இன்ப துன்பங்களிலும் பங்காளராக இருக்கிறார் இவர் கோயமுத்தூரின் ஒதுக்குப் புறத்தில் உள்ள தனது வீட்டில், தான் சந்திக்கிற எழுத்தாளர்களை தன் விருந்



தோம்பும் பண்பினால் கட்டி இழுத்துச் சென்று மகிழ்ச்சியடைகிறார்.

''புத்தகப் பதிப்பு விற்பனையை என் பெருமதிப்பான தொழிலாகக் கருதுகிறேன். எனது மகன் சிதம்பரத்தை இதில் முழுவதுமாக ஈடுபடுத்தியுள்ளேன். எனது மருமகன், மகள், மனைவி என்று குடும்பமே எனக்கு பக்கபலமாக உள்ளது. கோவையின் முக்கிய இடங்களில் ஐந்து கிளை நிறுவனங்களை வைத்து நடத்துவதில் கிடைக்கும் லரவேற்பு எனக்கு என் தொழிலில் மேலும் உற்சாகத்தைத் தருகிறது. பதிப்பு, நூல் விற்பனை என்பன என்னைப் பொறுத்த வரை சந்தோஷமும், நிறைவும் தருகிற தொழில்களே...''

''வாசகர்களையும், வாசகச் சந்தையையும் நாம் சரியான முறையில் இன்னும் அணுகவில்லை'' என்று சொல்கிறார் வேலாயுதம்.

விஜயா பதிப்பகத்துக்குச் சென்றால் இன்முகமான வரவேற்பும், தரமான நூல்களும் மட்டுமல்ல ருசியான காப்பியும் கிடைக்கிறது. இதைச் சலியாமலே செய்து வருகின்ற விஜயா பதிப்பகம், தனித்துவமான இலக்கிய நூல்களையும் வெளியிட்டு வருகின்றது.

அண்மையில் கோவையில் இலக்கிய அன்பர்கள் பெருமை கொள்ளத் தக்க நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இவை ஒவ்வொன்றின் பின்னணியிலும் வேலாயுதத்தின் பங்களிப்பு இருக்கின்றது.

வேலாயுதம் தனது சிறு பிராயத்தில் பட்ட. அவலங்ளே இன்று அவரை ஒரு பண்பட்ட மனிதாபிமானியாக மாற்றியிருக்கிறது. அவரது உரத்த சிரிப்பு. விசேஷமான அடையாளமாக எழுத்து வட்டாரத்தில் பேசப்படும் விஷயமாக குறிப்பிடப்படுகின்றது.

வேலாயுதத்தின் இத்தகைய வெற்றிக்குப் பின்னணியில் இருப்பது என்ன? ''ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான ரசனையும், ஆர்வமும் இருக்கிறது. அதை அறிந்து வாசகர்களுக்கேற்ற புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போவோமானால் நிச்சயம் எவரும் புத்தகம் வாங்குவதில் ஆர்வம் காட்டவே செய்வார்கள்'' என்று கூறும் இவர் கண்காட்சியின் உள்ளே நுழையும் ஒவ்வொருவரிடமும் பேசி அவர்களது ஆர்வத்தை அறிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்ற புத்தகத்தை விற்பனை செய்கிறார். வருபவர்களில் எவரும் ஒரு புத்தகத்தை யாவது வாங்காமல் வெளியில் செல்வதில்லை.

சரி; வேலாயுதத்தின் பூர்வோத்ரம் என்ன?

மதுரை மாவட்டம், உலகநாதபுரம் கிராமத்தில் பிறந்த இவர் 8-வது படித்ததோடு பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு கோவை வந்து ஜவுளி வியாபாரம். பலசரக்குக் கடை வியாபாரம் ஆகியவற்றில் 20 ஆண்டு கால அனுபவம் பெற்றார். அந்த அனுபவங்களை வைத்து தனது விற்பனை உத்திகளைப் பயன்படுத்தி விஜயா பதிப்பகம், விற்பனை நிலையத்தை நடத்தி வருகிறார் அவரது கண்காட்சியில் தமிழில் வெளிவந்துள்ள பெரும்பாலான புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு கொங்கு நாட்டு மக்களின் பொங்கும் படிப்பார்வத்திற்கு இரையளித்து வருகின்றது.

இந்த ஆண்டு நூல்கள் விற்பனையில் தாங்கள் அறிமுகப்படுத்தியுள்ள புதுமை என்ன என்று அவரைக் கேட்

டோம். ''புத்தக வங்கியின் புதுமைக் காசோலை'' ஒன்றை அறிமுகப்படுத்தி உள்ளேன். திருமணம், பிறந்தநாள், மண நாள் போன்ற நிகழ்ச்சிகளின் போது நண்பர்கள், உறவினர் களுக்கு அன்பளிப்பாக இந்த காசோலையை வாசகர்கள் வாங்கி அளிக்கலாம். இதை விஜயா பதிப்பகத்திலோ, அத னோடு ஒப்பந்தம் உள்ள பிற கடைகளிலோ கொடுத்து அவர வர்களுக்கு விருப்பமான புத்த கங்களை வாங்கிச் செல்லலாம். 25 ரூபாய் முதல் 100 வரை பல்வேறு மதிப்புகளில் காசோ லைகளை வெளியிட்டுள்ளோம். இதற்கு பேராதரவு கிடைத்துள் ளது'' என்று அவர் கூறிய போது. இந்தக் காசோலை உத்தியை எண்ணிப் புருவம் உயர்த்தாமல் இருக்க இயல வில்லை.

40·/. வரை சலுகை விலை : வாசகர்களுக்குக் கொண்டாட்டம்

பதிப்புத்துறையிலே ஒரு புதிய திருப்புமுனையை புதிய உத்தியைப் புகுத்தியவர் பேராசிரியர் திரு. ஸ்ரீசந்திரன் அவர் கள். முன்வெளியீட்டு திட்டம் என்று ஒன்றை கொணர்ந்து பதிப்பு வெளியாவதற்கு முன்னாலே பணம் பெற்று புத்தகங் களை உடனுக்குடன் விற்று பெரும் சாதனை புரிந்துள்ளார்.

பேராசிரியர் அவர்கள் சென்னை மீனப்பாக்கம் ஜெயின் கல்லூரியில் தமிழ் பிரிவிலே விரிவுரையாளராக பணியாற்றிய வர். பணியிலிருந்து ஒய்வு பெற்றதும் சாதிக்க வேண்டும் என்ற

எண்ணம் கொண்ட பேராசிரியர் தனக்கு தெரிந்த தமிழ் மொழியை பாமர மக்களுக்கும், பேரிலியக்கங்கள் புரியும் வண்ணம் வடிவமைத்து தருவதே இலட்சியம் எனக் கொண்டிருந்தார். தமிழ் மொழியின் மீதுள்ள தணியாத தாகத்தின் காரணமாக பழைய இலக்கியங்கள், இந்துமத வேத புத்தகங்கள், புராண நூல்கள், தமிழ்- ஆங்கில அகராதி போன்றவைகளை தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப எளிதாகப் படிக்கும் வண்ணம் வெளியிடுகிறார்.

காலம் மாற மாற தேவையும் மாறுகின்றது. தமிழ் நூல்கள் பழைய கடுமையான நடையில் இருப்பதை எளிமைப் படுத்தி பழமை கெடாமல் குன றந்த விலைக்கு விற்கிறார் என்பதுதான் பெரிய செய்தி.

தமிழ் புத்தகங்களை, தமிழ் ஆங்கில அகராதிகளை வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார். ஜெர்மனி, வட அமெரிக்கா, ஃபிரான்ஸ், மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யும் இவர், ''தன்னுடைய வெளியீடான தமிழ்-ஆங்கில அகராதிக்கும் உள்நாட்டில் மாணவர்கள், வியாபாரிகள் மத்தியில் பெறும் வரவேற்பு உள்ளது. ஏற்றுமதிக்குப் புத்தகம் கேட்டால் சிறந்த நல்ல நூல்களை தரமுடியும்'' என்கிறார்.

தனது எதிர்கால திட்டமாக இவர் கூறுவது, ஷேக்ஸ்பியர் நாடகங்களை தமிழ்ப்படுத்தி விற்கவேண்டும் என்பதே. புதிய உத்தியை பயன்படுத்தி எளிதான முறையில் புத்தகத்தை வெளியிட்டு நிறைய வியாபாரம் செய்து வரும் பேராசிரியர், சிறந்த தமிழர் மட்டுமல்ல, சிறப்பான பாராட்டத்தக்க தமிழர் என்பதையும் உணர்ந்தோம்.

ஏற்றுமதியாளருக்கு ஏற்ற ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் வைத்திருக்க வேண்டிய தமிழ்-ஆங்கில அகராதியை மலிவு விலைக்கு தருகிறார். ''நீங்களும் வாங்குங்களேன். ஆங்கிலம் பயிலுங்களேன் என்று நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. ஏனெனில், என் வெற்றியை என் விற்பனைகள் கூறும்'' என்று அடித்துக் கூறுகிறார் பேராசிரியர்.

தனிச் செய்தி

- ☐ இடைத்தரகு இல்லை.
- ☐ அபிமான வாசகர்கள் 40% வரை கழிவை நேரிடையாகப் பெறுகின்றனர்.
- ☐ இதனால் தொடர்ந்து நூல் வாங்கிப் படிப்போர் தொகை கூடுகிறது.
- ☐ படிக்கும் பழக்கம் வேகமாக வளர்கிறது.

என்னை வாசித்த புத்தகங்கள்

மூதறிஞர் ராஜாஜி

தமிழ்த் தொகுப்பு : கிருஷ்ணா வேணுகோபாலன்

''உங்களைக் கவர்ந்த நூல்கள் எவை...?''

இந்தக் கேள்வி பல ஆண்டுகளுக்கு முன் என்னிடம் கேட்கப்பட்டது. அப்போது எனக்கிருந்த மனப்பக்குவம் வேறு. அதற்கு ஏற்ப அப்போது பதில் அளித்திருந்தேன். ஆனால் இப்போது அதே கேள்வியை எண்ணிப் பார்க்கையில் எனக்கு சற்றுச் சங்கடமாகத்தான் இருக்கிறது. அதோடு உண்மையான நேர்மையான பதிலைக் கூற முடியுமா என்பதிலும் எனக்குச் சற்று சந்தேகமே.

அறிஞர்கள், மேதைகள் இவர்களெல்லாம், சில நல்ல நூல்களைப் படித்து அதில் கூறப்பட்டுள்ள பல நல்ல விஷயங்களை ஏற்றுக் கொண்டவர்கள். அவற்றைச் சொந்த வாழ்க்கையில் கடைபிடித்து வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அதனால்தான் அவர்கள் மாமனிதர்களாக ஞானிகளாகத் திகழ்கிறார்கள்.

ஆனால் மற்றவர்களில் பலர் இன்ன இன்ன நூல்களைப் படித்திருக்கிறேன். இன்ன இன்ன நூல்களை என்னை மிகவும் கவர்ந்தன என்று பட்டியல் போடுவார்கள் அதெல்லாம் வெறும் பெருமைக்காகத்தான் என்று சொல்வேன்.

மனித மனம் கல் மனம் என் பார்களே அதைப் போன்றது. நம் முன்னோர்கள், ஞானிகள் இவர்களெல்லாம் எவ்வளவோ நல்ல விஷயங்களைச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள். அவையெல்லாம் பாறையில் விதைத்த விதையாக பயனற்றுப் போயுள்ளன. இதனால்தான் முதலில் கேட்ட அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கச்

சற்றுத் தயக்கமாக இருக்கிறது என்று சொன்னேன்.

சிலர் சில புத்தகங்களைப் படித்து விட்டுப் பாராட்டி இருக்கலாம். வேறு சிலர்படித்த புத்தகங்களில் உள்ள கருத்துக் களை அப்படியே தங்களது மனத்தில் ஆழப் பதிய வைத்து கொண்டிருக்கலாம். ஆனால் அந்தக் கருத்துக்கள் எந்த அள வுக்கு வாழ்க்கைக்குப் பயனுள் ளவைகளாக இருந்திருக்கின் றன?

அனைவரும் பகவத் கீதையை படித்திருக்கிறோம்; அதில் அடங்கியுள்ள கருத்துக் களில் மனத்தைப் பறிகொடுத் திருக்கிறோம். ஆனால் எத் தனை பேர் கீதையில் கிருஷ்ண பகவான் கூறியுள்ள உபதேசங் களை வாழ்க்கையில் கடைப் பிடித்து வந்திருக்கிறோம். யாரேனும் அப்படிக் கடை பிடித்து வந்துள்ளதாகச்சொன் னால். ஒன்று அது ஞானியாக இருக்கவேண்டும் அல்லது அண்டைப் புளுகாக இருக்க வேண்டும். அந்த விஷயத்தில் யாராலும் நேர்மையாக நடந்து கொள்ள முடியாது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

எனவே வாழ்க்கையில் உற்சாகம் ஊட்டி, என்னை ஊக்குவித்த சில நூல்களைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்பு கிறேன். நான் விரும்பிப்படித்த புத்தகங்கள் அனைத்தும் மற்ற வர்களின் சிபாரிசின்படியோ, ஆலோசனையின் படியோ தேர்ந்தெடுக்கப் பட்டவை அல்ல. அவை தற்செயலாகக் கண்டெடுக்கப்பட்டவை.

ஒரு நாள் என்னுடைய வக்கீல் நண்பர் ஒருவரின் வீட் டிற்குப் போயிருந்தேன். அப் போது அவருடைய மேஜையின் மீது கிடந்த பத்திரிகைகள் சஞ்சிகைகள் இவற்றிற்கு இடையே ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தேன். அது பிரபல ஆசிரியரான ஹென்றி தோரே' (HENRY DAVID-THOREAU) எழுதிய டியூடி ஆப் டிஸ் ஓபீடி யன்ஸ் (DUTY OF DISOBE DIENCE) என்கிற புத்தகம். பொழுது போக்கிற்காகப் படிக் கத் தொடங்கிய அந்த நூல் பிற்காலத்தில், என் வாழ்க்கைக் கான திட்டம் தயாரிக்கப் பயன் படும் என்று அப்போது நான் எதிர்பார்க்கவில்லை. இந்தப் புத்தகம்எனக்கு ஒருவழி காட்டி யாக அமைந்தது.

ஒரு முறை நான் சிறை சென்ற போது என்னுடன் எடுத்துச் சென்ற வெகு சில நூல்களில் 'டேனியல் டீஃபோ' (DANIEL DEFOE) 'ராபின்சன் குருசோ' என்னும் நூலும் அன்று பள்ளியில் ஆசிரியரின் வற்புறுத்தலுக்காகப் படிக்க வேண்டிய ஒரு புத்தகமாக இல்லாத காரணத்தால் என்னு டைய நாற்பதாவது வயதில்

நான் அதைப்படிக்க நேர்ந்தது. அப்போது சிறுவர்களுக்காக, எழுதப்பட்ட கதைகளாய் மட்டும் அல்லாமல் அழிக்க ஒண்ணாத, ஆழப்பதியக் கூடிய ஆன்மிகக் கருத்துக்களாக அவை எனக்குத் தோன்றின.

அடுத்து ஒரு புத்தகம். அதுவும் தற்செயலாகக் கிடைத்தது தான். அளவில் சிறியதும், ஆனால் தரத்தில் பெரியதுமான "சாக்ரடீசின் விசாரணையும் தீர்வும்" (The Trial and death of Socrates) என்னும் புத்தகம். அந்தப் புத்தகம் என்னை முழுவதுமாக ஆக்ரமித்து வடிவமைத்தது போல் வேறு எந்தப் புத்தகமும் செய்யவில்லை எனலாம்.

'சாக்ரடீசின் விசாரணை' புத்தகத்தைப் போல் என்னைக் கவர்ந்த வேறு ஒரு புத்தகம் 'ஜான் ஸ்டார்ட் மில்ஸ்' எழுதிய (John Staurt Mills) விடுதலை, (Liberty) என்னும் புத்தகம் அது அறிவின் ஆற்றலுக்கும் துணிச்சலுக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இந்த இரண்டு நூல்களுமே வாய்மையின் தன்மையையும் வலிமையையும் எடுத்துக் கூறுவன.

மார்க்ஸ் ஒளரேலியஸ் (Marcas Aurelius) எழுதிய தியானம் (Meditation) என்னும் புத்தகம் என்னை மிகவும் கவர்ந்தது. அந்த நூல் நான் துயருற்றிருந்த போதெல்லாம் ஆறுதல் அளித்துப் பெரிதும் உதவியுள்ளது.

கடைசியாக ஒன்றை மட்டும் நான் வலியுறுத்திக் கூற விரும்புறேன். என்னை ஆக்ரமித்து ஆளாக்கியவை ஆங்கில நூல்கள் மட்டும் அல்ல, என்னுடைய சிறுவயதில் என் தாயும் என் இரண்டு அத்தைமாரும் எனக்குக்கூறிய அறிவுக் கதைகள், ஆன்மிகக்கதைகள், புராணக் கதைகள் ஆகியவை தான்என்னை இந்த அளவுக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளன என்பேன். □

எழுத்தாளன், சமூகத்திற்குக் கட்டுப்பட்டு, சுதந்திரமின்றி எழுதவேண்டுமென்பது விந்தையாக இருக்கிறது.

சமூகம் என்கிற பூச்சாண்டிக்கு எழுத்தாளன் பயப்பட வேண்டியதில்லை.

சமூகம் என்பது கட்டுக் கதை; கற்பனை.

தனிப்பட்ட முறையில் புத்தகம் வாங்கிப் படிக்கும் பழக்கத்தை வாசகரிடம் ஏற்படுத்த வேண்டும்.

எழுத்தாளர், பதிப்பாளர், நூலகர், வாசகர் ஆகிய நால்வரும், நம்பிக்கையின் துணையோடு செயல்பட்டால் சாதனை ஒன்றை நிகழ்த்தலாம்.

பேராசிரியர்: **ரா. பாஸ்கரன்.**

புதுப் பொலிவு பெற்ற புத்தக சாலை

கல்பனா

கால் நூற்றாண்டாக இயங்கிவரும் அமெரிக்கத் தகவல் மைய நூலகம் இன்று புது மெருகுடன் ஜொலிக்கிறது. வேகமான வாழ்வுக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் வாசர்கள் விரைவில் தகவல்களைப் பெற நவீன வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

ஒரு மாதகாலத்திலேயே சீரமைப்புப் பணிநடைபெற்று முடிந்தது. இன்று போய் பார்த்தால் புத்தக அடுக்குகள் நேர்க்



கோடாய் நின்றது போய் ஓரமாய் ஒய்யாரப்பார்வை பார்க்கின்றன. எந்தப் புத்தகங்கள் எங்கே இருக்கின்றன என்ற விவரங்கள் அட்டைகளில் எழுதி வரிசைப்படுத்தி வைக்கப் பட்டிருக்கும் புத்தக விவர அலமாரியை காணோம். அதற்குப் பதில் நான்கு கம்ப்யூட்டர்கள் 'கண்' சிமிட்டின. அதில் ஒன்று ஊனமுற்றவர்கள் பயன்படுத்துவதற்காக உட்கார இதமாய் மெத்தென்று புது டிசைன் நாற்காலிகள். கண்ணை உறுத்தாமல் அதே நேரம் படிப்பதற்கு வசதியான வெளிச்சம்.

''நூலகம் ஆரம்பித்து 25 வருடங்கள் ஆகிவிட்டது அதனால் நூலகத்துக்குப் புதுப் பொலிவு தர திட்டமிட்டு கிட்டத்தட்ட 190,00 டாலர்கள் (சுமார் ஒருகோடி ரூபாய்) செலவில் பல வசதிகளைச் செய்திருக்கிறோம். இதற்கென அமெரிக்காவில் இருந்து நிபுணர்களை வரவழைத்திருந்தோம்'' என்கிறார் நிகழ்ச்சி அமைப்பு அதிகாரியும் நூலக பொறுப்பாளருமான டாக்டர் ஆண்ட்ரூ கார்டெஸ் கிரெய்க்.

இந்தியாவில் இருக்கிற தில்லி, பம்பாய் கல்கத்தா, சென்னை ஆகிய நான்கு இடங்களில் அமெரிக்கத் தூதரகம் உண்டு. இந்த இடங்களில் அமெரிக்கத் தகவல் மைய நூலகமும் இருக்கிறது. தென்னிந்தியாவில் இருப்பவர்கள் சென்னையில் உள்ள நூலகத்தில் உறுப்பினராக முடியும் கட்டணம் எதுவும் கிடையாது. ''இப்போது சென்னை நூலகத்

தில் 16,00 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகபட்ச சேவையை அளிப்பதே எங்கள் குறிக்கோள் அதை நிறைவேற்ற வசதியாகத்தான் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன'' என்று நூலக இயக்குநர் இந்திரா சோமன் தெரிவிக்கிறார்.

இதம் தரும் நாற்காலிகள், கார்ப்பெட்டுகள் கண்ணுக்குக் குளுமையான உள் அலங்கார வடிவமைப்பு, உறுத்தாத வெளிச்சம், ஆய்வு செய்ய தொந்தரவில்லாத அமைதி என்ற இனிய சூழ்நிலை ஒரு புறம் உருவாக்கப்பட்டிருந்தாலும் மிகவும் முக்கியமான மாற்றம் கம்ப்யூட்டர் மயமாக்கல்.

இனிமேல் நூலக உறுப்பினர்களுக்கு நூலக அட்டை தேவையில்லை. உறுப்பினர் எண் கொண்ட அடையாள அட்டை போதும். அந்த சின்னஞ்சிறு அட்டையே நம் ஜாதகத்தைச் சொல்லிவிடும். எடுத்த புத்தகத்தை எப்போது திருப்பித் தரவேண்டும் என்று நினைவூட்டுவது முதல் நாம் படிக்க ஆர்வத்துடன் முன் பதிவு செய்து வைத்திருக்கும் புத்தகத்தை எப்போது வாங்கிச் செல்லலாம் என்பது வரை அத்தனைத் தகவல் பிசகில்லாமல் உரிய நேரத்தில் வந்து சேரும்.

புத்தக விவர அலமாரி இருந்த இடத்தில் நான்கு கம்ப்யூட்டர் டெர்மினல்கள் உட்

கார்ந்திருக்கின்றன. நாம் தேடும் புத்தகத்தின் பாதிப் பெயரோ, அதை எழுதியவரின் பெயரோ நினைவிருந்தால்கூட பதிவு செய்தால் அது நமக்குக் கைகொடுக்கும். அவசரத்திலோ, அறியாமலோ ஏதாவது ஒரு பட்டனைத் தட்டிவிட்டு விவரம் அழிந்துவிடுமோ என்று பயப்படத் தேவையில்லை. ''கம்ப்யூட்டர் பற்றி அதிகம் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பயன்படுத்துபவருக்கு உதவும்படி, எளிமையான முறையில் விவரங்களைப் பெறுவதற்கான வசதி இது. என்ன செய்தாலும் விவரங்களைத்தவறிகூட யாரும் அழித்துவிட முடியாது'' என்று நூலகத்தின் கொடுப்பல் வாங்கல் (சர்குலேஷன்) பிரிவின் பொறுப்பாளர் ரத்னா முகர்ஜி விளக்கினார். நூலக உறுப்பினர்கள் தேடும் புத்தகம் சென்னை நூலகத்தில் கிடைக்காவிட்டால் மற்ற நகரங்களில் உள்ள அமெரிக்க நூலகங்களில் இருக்கிறதா என்று நூலகத்தில் பணிபுரிபவர்கள் கண்டுபிடித்துச் சொல்லமுடியும் என்றும் ரத்னா தெரிவித்தார்.

இதைத் தவிர, நூலகத்தில் கடந்த பத்து வருடங்களில் வெளியான முக்கியமான பத்திரிகைகள் அவற்றில் வெளியான கட்டுரைகளின் விவரமும் தொகுக்கப்பட்டுள்ளது.

தலையணை மாதிரி தடிமனான பல புத்தகங்களில் இடம் பெற்றுள்ள விவரங்கள் அத்தனையும் ஒரு சின்ன வட்டத்தட்டில் பதிவு செய்துவிட முடியும். அந்த 'சிடி-ராம்' வசதி இப்போது இருக்கிறது.

அச்சில் உள்ள புத்தகத்தில் அமெரிக்காவில் உள்ள அமைப்புகள் பற்றி விவரங்கள், முக்கியமான பட்டியல், டைம் பத்திரியின் தொகுப்பு என்று வெவ்வேறு விவரங்கள் அடங்கிய எட்டு சிடி-ராம்கள் நூலகத்தில் இருக்கின்றன.

அமெரிக்க நிபுணர்கள் வடிவமைத்துத் தந்துள்ள டேட்டா டிரெக் முறையில் இப்படிப் பல வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கம்ப்யூட்டர் பிரிவின் அதிகாரி கீதா கணேசன் தெரிவித்தார். நூலகத்தில் பணிபுரியும் எல்லா அதிகாரிகளும் அமெரிக்க நிபுணர்களால் கம்ப்யூட்டர் பயிற்சி தரப்பட்டுள்ளதாக இந்திரா சோமன் சொல்கிறார்.

புத்தகம் படிக்கும் பழக்கம் குறைந்து வருகிறதோ என்ற பயம் ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்க நூலகத்தின் அனுபவம் எப்படி என்று கேட்டதற்கு. "உறுப்பினர்களில் படிக்கும் ஆர்வம் அதிகரித்திருப்பதாகவே நாங்கள் உணர்கிறோம். சொல்லப்போனால் உலகெங்கும் உள்ள அமெரிக்கத் தகவல் நூலகங்களின் சேவையில் இந்திய நூலகங்களின் பங்கு 40 சதவீதம்'' என்று மகிச்சியுடன் சொல்கிறார் நூலக பொறுப்பதிகாரி டாக்டர் ஆண்ட்ரூ காாடெஸ் கிரெய்க்.

''அமெரிக்கா சம்பந்தமான சகல விவரங்களையும் தருவதுதான் நூலகத்தின் நோக்கம் என்றாலும் பல சமயங்களில் ஐக்கிய நாடுகள் பற்றிய விவரங்கள் கேட்பார்கள். நாங்களும் கூடியவரை அவர்களின் தேவையை உணர்ந்து முடிந்தவரை தகவல் சேகரித்துத் தருவதுண்டு'' என்று இந்திரா சோமன் சொல்கிறார்.

இந்த நூலகத்தில் கிட்டத்தட்ட 22,000 புத்தகங்கள் இருக்கின்றன. 16,000 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அடிக்கடி நூலக சேவையைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் சென்னையைப் பொறுத்தவரை சுமார் மூவாயிரம் பேர். வெளியூர்களில் ஒரு 2,500 பேர். தென்னிந்தியா முழுக்க 8,000 பேர்.

உறுப்பினர்களுக்குப் புத்தகங்கள் எடுத்துச் செல்லத் தருவது. திரும்பப் பெறுவது, ஆராய்ச்சியாளர்கள் தேவையான குறிப்புகள் எடுக்க உதவுவது, தொலைபேசியில் விவரம் கேட்பவர்களுக்குத் தகவல் சொல்வது, பத்திரிகை நிறுவனங்கள் கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள், பொது வாழ்வில் உள்ளவர்களின் தேவை, ரசனைக்கு ஏற்ற விவரங்களைத்தருவது போன்ற பணிகளைத் தவிர வேறு சில நிகழ்ச்சிகளையும் அமெரிக்க நூலகம் நடத்துகிறது

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நடந்த தினங்களின்போது சம்பந்தப் பட்ட புகைப்படங்கள், புத்தகங் களை கண்காட்சியாக வைக் கிறார்கள். முதல் மாடியில் உள்ள ரெஃபரன்ஸ் பிரிவின் ஒரு பகுதியை இதற்காகப் பயன் படுத்தி வந்தார்கள். இப்போது அந்த மாதிரி சிறுகூட்டம் கண் காட்சி நடத்துவதற்கென்றே சிறப்பு வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

சகல சேவைகளையும் செய் வதற்கென 12 நூலாக அதிகாரி கள் இருக்கிறார்கள். நூலக இயக்குநர் இந்திரா சோமனில் ஆரம்பித்து ரத்னா, மீனா, கிருஷ்ணா, கீதா என்று நூலகத்தில் முக்கால்வாசி பேர் பெண்கள்.

"அமெரிக்கத் தகவல் மைய தென்னிந்திய இயக்குநர் **மிரியம் கிச்சர்ட்** எங்களுக்கு தரும் ஊக்கம், நாங்கள் உற்சாகமாக பணியாற்ற பெரும் உந்து சக்தி யாக இருக்கிறது" என்று சந்தோஷத்துடன் சொல்கிறார் இந்திரா சோமன்.

அந்த உற்சாகமான பணி யும், இனிய சூழ்நிலையும், நவீன வசதிகளும் அறிவுத் தாகம் கொண்டவர்களும் ஒரு வ ர ப் பி ர சா த ம் என்பது உண்மைதான்.

புதிய செய்தி : வேலை நேர மாற்றம்

1995 அக்டோபர் 3 முதல், நூலகம் வாரம் தோறும் திங்கள் முதல் வெள்ளிவரை தினமும் காலை 9.30 முதல் மாலை 6 வரை திறந்திருக்கும். சனி, ஞாயிறு, நூலகத்திற்கு விடுமுறை.

---

opac. mkj
(please do not delete)

நன்றி : தினமணி கதிர்

AMERICAN CENTER LIBRARY MADRAS

HOW TO SEARCH THE ON-LINE PUBLIC ACCESS CATALOG (OPAC) :

USIS libraries in India have automated their operations using a software developed by Data Trek, USA. The database contains information on the holdings of our library. The system

also indicates the current status of titles, eg. **Checked out**, **In collection**, when searches are performed.

We give below basic instructions to access the OPAC :

To begin search :

> Press **F-5**. **Window** will appear giving options for searching by author, title, etc. Highlight your choice by using the **UP** and **DOWN** arrow keys and hit **ENTER**. If you choose to search by **author**, type the last name in the space provided at the bottom of the screen. The highlighter on the screen will move to the particular entry. Hit **ENTER** to view results. To move to the next or previous records, use the **UP and DOWN** arrow keys. Alternatively, using the **UP and DOWN** arrow keys you can highlight a particular author and hit **ENTER**.

Similar searches can be done by title, subject and other options listed.

Searching by multiple key words :

> Type a word against **Search for :** prompt. eg. **American** literature, and hit **ENTER** to view results. If you retrieve too many records, narrow the search using the operator **AND**. Eg. American literature **AND 20th century** Other operators **OR**, **AND NOT**, may also be used to perform more specified searches.

Function Keys :

F1	A descriptive **HELP** window appears
F4	Displays group listing of titles
F5	Begin search, displays options for searching
F10	Options : at the Start Search Screen, pops up the menu offering Browse (F5), Restore Display, etc., at the Record Display Screen, offers choices of Group View(F4), Mark Records, Print/Display. etc.
Esc	Begin new search

Please feel free to call the Readers' services librarian of our library if you have any questions. The telephone number is 827 3040, ext-239.

மழலைக் கவிஞர் பி.வி. கிரி

பொன். மறை மலை

திரு. பி. வி. கிரி, செங்கை எம். ஜி. ஆர். மாவட்டம் கடம்பத்தூரில் 2-6-1938-இல் பிறந்தவர் பத்திரிகைத் துறையில் 26 ஆண்டுக் காலம் அனுபவம் உள்ளவர். பத்திரிகைத் தொழிலியலில் சான்றிதழ் பெற்றவர்.

1970-இல் குழந்தை இலக்கியத்துக்காக 'யுனெஸ்கோ' மன்றச் சான்றிதழும், 1975-இல் சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில் ஏவி. எம். அறக்கட்டளையின் முதற் பரிசு—தங்கப்பதக்கமும், 1979-இல் மழலைக் கவிஞர்' விருதும் பெற்றவர்.

1984-இல் குழந்தை இலக்கியத்துக்கான தமிழக அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். 1985-இல் சிறந்த பத்திரிகையாளருக்கான வி ஜி. பி. அறக்கட்டளையின் சிறப்பு விருதினைப் பெற்றவர்.

1987-இல் குழந்தை இலக்கியத்துக்கான தேசியப் பரிசு' (National Prize) பெற்றவர்.



1988-இல் ஏவி. எம். அறக்கட்டளையின் வெள்ளிப் பதக்கம் பெற்றவர்.

இவரது பாடல் தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலப்பாட நூல்களில் 'இடம் பெற்றுள்ளன. சென்னைப் பல்கலைக்கழக பி. ஏ., பி. லிட்., பட்ட வகுப்பு சிறப்புத் தமிழில் இவரது பாடல் இடம் பெற்றுள்ளது. 50 நூல்கள் எழுதியுள்ளார்.

இவர் படைப்புகள், எம்ஃபில் மாணவர்களால் ஆய்வு

செய்யும் சிறப்பினைப் பெற்றவை.

பல கருத்தரங்குகளில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், நூல்களாக வெளிவந்துள்ளன.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, ஆகியவற்றில் பங்கு கொண்டு வரும் இவரது தமிழ் இலக்கியப் பணியை மகாவித்துவான் மே. வீ. வேணு கோபாலப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் ஜஸ்டிஸ் மகாராஜன், கவியரசு கண்ணதாசன், சௌந்தரா கைலாசம் ஆகியோர் பாராட்டியுள்ளனர்.

தமிழ்நாடு அரசின் வெளியீடான ''தமிழரசு'' இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.





'நூலாசிரியர்' பகுதிக்கு :

'நூலகம்' இதழில் 'நூலாசிரியர்' என்னும் புதிய பகுதி தொடங்குகிறது. இப்பகுதியில் இடம் பெறுகிறவர்கள் புத்தகங்கள் எழுதியிருக்க வேண்டும். எழுத்தாள அன்பர்கள் தங்களைப் பற்றிய முக்கியக் குறிப்புகளை படைப்புகளின் நூல் விபர பட்டியலுடன்(Author Bibliography) தங்கள் 'பாஸ்போர்ட்' அளவு புகைப்படத்துடன் எழுதி அனுப்பலாம்

—ஆசிரியர்.

100 ஆண்டு நூலகத் தமிழ் நூற்றொகை விளக்கம்

ஸ்ரீ பெருமாள் பிள்ளையவர்கள் புத்திரர் மனோன்மணீயம் நாடக ஆசிரியர் பி. சுந்தரம் பிள்ளை (கி.பி. 1855-1897) M.A., F.M.U., F.R.H.S., M.R.A S.

அறிவினை யுணர்த்துங் கருவி நூலென்ப.

'நூல்' என்பது அறிய வேண்டியவற்றை அறிவிக்கும் ஓர் கருவி. சதுர்வேத முதல் பல்லியின் குரல் முதலியவற்றால் நேரிடுகிறவைகளைத் தெரிவிக்கும் பல்லிசாத்திரம் வரை, கற்கக் கூடிய எல்லாவற்றிற்கும் நூல் எனும் தமிழ்ப் பெயர் பொருத்தம் உடையதாக இருக்கின்றது. இவ்வழக்கத்தை அனுசரித்துப் பார்க்கும் போது நூல் என்பது யாதேனும் ஒன்றை வரன் முறை அறிவிக்கும் கருவியெனக் கூறலாகும். ஆதலால் நூலின் முதற் பிரயோசனம் அறிவே ''அறம் பொரு ளின்பம் வீடடைதனூற்பயனே'' (நன்னூல்) என்பதை இதனால் மறுத்ததன்று. அவைகளுக்குப்பரம்பரா சாதனமாவதன்றி, நூல் கற்றவுடன் பயப்பது அறிவே. அவ்வறிவைத் தக்க வழி செலுத்தின் அடையக்கூடியவை அந் நான்கும் நூலுக்குச் 'சாத்திரமென்பது' பொதுவான வடமொழிப் பிரதிபதம் ஆகலாம். சாஸனம் சமஸனம் என்னும் இரண்டு அடிகளும் பொருத்தமுடையவை. ஆதலால் வழக்கத்தில் வேதம் சாத்திரம் புராணம் என்ற பிரிவில் தோற்றும் சிறப்புப் பொருள்களை நீக்கிப் பொதுவாக எதனையாவது வரன் முறை சாஹித்து ஒழுங்குபடுத்தி அறிவிப்பது என்ற பொது அர்த்தத்தை மாத்திரம் தருவதாகக் கருத்தில் சாத்திரமும் நூலும் ஒரு பொருளுடையனவேயாம்.

உ. அறிவு போறிவு சிற்றறி
புலனறிவென
மூவகை யதனான் முறையே
நூலும்
மதம்பொது கலையென
வகைமூன் றாமே.

அனுபவசித்தமான அறிவை இன்னதென்று இலக்கணங் கூறிக் காட்டல் அரிது. ஆயினும் நூல்களை வகுத்துப் பிரிப்பதற்காக அறிவினை மூவகையாய்க் கூறுபடுத்தி விவரிக்க வேண்டியதாக இருக்கின்றது.

முகவுரை

தற்கால நிலைமைக்கேற்ப சாஸ்திரங்களை எத்தனை வகுப்பாய் வகுக்கலாமென்பதும் அவற்றின் முக்கிய முறையும் விஷயமும் என்ன என்பதும் ஆம்வகை எடுத்து விளக்குவதே கீழ்வரும் நூற்றொகை விளக்கம் பொதுவியலின் தலைமையான உத்தேசம். இது திருவிதாங்கோட்டு கவர்மென்றாருடைய நூதன பிரசங்க ஏற்பாட்டின்படி ஒரு உபந்நியாசமாக எழுதப்பட்டு திருவனந்தபுரம் சர்வகலா சாலையில் வாசிக்கப்பட்டது. வேறு பல வேலையினிடையில் அவசரமாய் எழுதப்பட்டமையால், சொற் குற்றம் முறைவழு இவை இப்பொதுவியலில் இல்லாதன ஆகா ஆயினும் ஆன்றோர் அவற்றை ஒழித்து இச் சிறு நூலை பொதுவாக அங்கீகரிப்பாராயின், இதிற் குறிக்கப்படும் சில தலைமையான சாஸ்திரங்களின் முக்கிய முடிபுகளை இவ்வாறே விளக்கி இந் நூற்றொகை விளக்கத்தின் ஒவ்வோர் இயலாக இயற்ற வேண்டுமென்னுங் கருத்துடன் இஃது வெளியிடப்படுகிறது.

திருவனந்தபுரம்,
கரசுங்ஙூ
பேடரவி. } மே, 1888

பி. சுந்தரம் பிள்ளை

நூலகத் தந்தை

எஸ். ஆர். ரங்கநாதன்

1961இல் இந்நூல் பற்றி கூறியது

ஹர்பர்ட் ஸ்பென்ஸர் அமைத்துள்ள அறிவு உலக வகுப்பு முறையை பி. சுந்தரம் பிள்ளை தமிழில் எழுதி வெளியிட்டதே இவ்வெளியீடு. கழகத்தின் 190-ஆவது வெளியீடு இது. 1888 இல் அதன் முதன் முறையாக ஆசிரியராலேயே வெளியிடப்பட்டது. ஆனால் அது வெகு நாட்களாகக் கிடைக்கப் பெறாமல் இருந்தது. 1936 இல் கழகம் அதன் வெளியீட்டு வரிசையில் இந் நூலை வெளியிட்டது. அதே ஆண்டில் நூல் உலக பகுப்பு இயல் பற்றிய நூலொன்ற எழுதுவதில் நான் முனைந்திருந்தேன். ஆகையால் வ (ப) குப்பு முறையைப் பற்றி அறிவித்த எந்த கொள்கைகளையும் அறிந்து கொள்வதில் என் உள்ளம் அந்த சமயத்தில் விழிப்புற்றிருந்தது. அந்நூலில் வெளியிட்டிருந்த கருத்துக்கள் என் பாராட்டுகளைப் பெற்றன.

(பக்கம் 19. எஸ்.ஆர். ரங்கநாதனின் முன்னுரை. பாராட்டு விழா நூல் பட்டி (திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் முதல் 1008 வெளியீடுகள் அடங்கியது. 1961. கூட்டாசிரியர் இரா. முத்துக் குமாரசாமியின் மொழிபெயர்பு.)



செல்லப்பா இவ்வாண்டு அக்டோபர் மாதம் எண்ப தாண்டை முடிக்கிறார். அவரு டைய எனது கதை பாணி என்ற புத்தகத்தை 'விளக்கு' நிறுவனம் வெளியிடுகிறது. விழாவை சிறப்பாக நடத்த 'வெளி' ரெங்கராஜன் முனைந் திருக்கிறார் செல்லப்பா என் றால் சமரசப்படுத்திக் கொள் ளாதவர் என்று பொருள். அப்படித்தான் அவர் ஆயிரம் முழு நிலவைக் கண்டிருக்கிறார். **Modernism** என்பதை ஒரு **Scepticism** பார்வையாளனாகப் பார்க்கும் ஒரு **Conservative** (இந்த ஆங்கில வார்த்தைகளை அவரவர் தமிழ்ப் படுத்திக் கொள்ளலாம். இந்த வார்த்தை களுக்குத் தரப்படுத்தப்பட்ட தமிழ்ச் சொற்கள் இல்லை என்று நினைக்கிறேன். இதைத் தரப்படுத்த நமக்கு வேண்டியது வேர்ச் சொல் அகராதி. (Etymological Dictionary) மணவை முஸ்தபா கவனிக்க வேண்டும்.)

இன்னும் அச்சில் ஏற்றப் படாத ஒரு நாவல் உள்பட பல

ஆயிரம் பக்கங்கள் அவரிடம் கையெழுத்துப் பிரதியாக இருக்கின்றன. விழாவன்று அவர் எழுதிய 'முறைப் பெண்' நாடகத்தைடெல்லி யதார்த்தா குழுவினரைக் கொண்டு நடத்தச் சொல்லியிருக்கலாம் என்று தோன்றியது. மதுரையில் இந்த நாடகம் நடத்தப்பட்டபோது, லேசில் திருப்தி அடையாத செல்லப்பாவே திருப்தி அடைந்தார். நாடக இயக்குநர் பென்னேஸ்வரனைப் பாராட்டினார். சில காலம் பெங்களூர் வாசியாக இருந்த செல்லப்பா, இப்போது முழுக்க முழுக்க திருவல்லிக்கேணி வாசியாக இருக்கிறார். சென்னையில் பல பகுதிகளில் வசிப்பவர்கள் வேறு பல பகுதிகளுக்கு மாறிச் சொல்லும்போது, இந்த திருவல்லிக்கேணி வாசிகள் மட்டும் எத்தனை வருடங்களானாலும் மாறி, வேறு ஒரு பேட்டைக்குச் செல்ல மனம் ஒப்புவதில்லை. இதற்குக் காரணம் பார்த்தசாரதிப் பெருமாளா அல்லது பாரதியா?

நன்றி : சுபமங்களா

எஸ். இளையவன்
சென்னை 23

கேளுங்கள்

? கண்ணதாசன் வைரமுத்து ஒப்பிடுங்கள் பார்ப்போம்



! வாழ்க்கையால் கவிதைக்குப் பொருள் சேர்த்தவர் முன்னவர். கவிதையால் வாழ்க்கைக்குப் பொருள் சேர்த்தவர் மற்றவர்.

குமுதம்—அரசு-12-10-95

கவிஞர் சுரதாவுக்கு

ராஜராஜன் விருது முதல்வர் வழங்கினார்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கும் சிறந்த படைப்பிலக்கிய பரிசான 'மாமன்னன் ராஜராஜன்' விருதை "தேன் மழை"க் கவிஞர் சுரதாவிற்கு தமிழக முதல்வர் டாக்டர் ஜெயலலிதா வழங்கினார்

சுரதாவுக்குப் பொன்னாடை போர்த்தி ரூ. 1 லட்சம் பரிசுத் தொகையையும் பாராட்டிதழையும் அவர் அளித்தார்.

கல்வி அமைச்சர் கே. பொன்னுசாமி, தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவ்வை நடராசன் பதிவாளர் அப்துல் ரசாக், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலர் கிருஸ்துதாஸ் காந்தி ஆகியோர் அப்போது உடனிருந்தனர்.

கவிஞருக்கு முதல்வர் விருது: தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக ராஜராஜன் விருதை கவிஞர் சுரதாவிற்கு முதல்வர் ஜெயலலிதா வழங்குகிறார்.

வல்லிக்கண்ணனுக்கு 'ராணா' விருது

பிரபல தமிழ் எழுத்தாளர் வல்லிக்கண்ணனுக்கு ஈரோட்டில் ராணா இலக்கிய விருது' வழங்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை மாலை ராணா திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், வல்லிக்கண்ணனுக்கு இந்த விருதினை, விழாத் தலைமையேற்ற மத்திய அரசின் மக்கள் நல் வாழ்வுத் துறை இயக்குநர் ஆர். பாலகிருஷ்ணன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழன்பன், பழனி அரங்கசாமி, சிலம்பொலி சு. செல்லப்பன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

வல்லிக்கண்ணன் ஏற்புரையாற்றினார்.

தி. வல்லிக்கண்ணன்

பவள விழா

நாள : 11-11-95 சனிக்கிழமை

இடம்: சீனிவாச சாஸ்திரி அரங்கம் மயிலை, சென்னை.

அசோகமித்திரனுக்கு 'நல்லுறவு விருது'

எழுத்தாளர் அசோகமித்திரனுக்கு 1993-ஆம் ஆண்டுக்கான 'நல்லுறவு விருது' (Harmony Award) வழங்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் சமூகங்களிடையே நல்லுறவிற்கும் எழுத்து மூலம் அவர் ஆற்றியுள்ள பணிக்காக இவ்விருதைப் பெற்றார்.

தில்லியிலுள்ள உணர்வுப் பரிமாற்றம் மற்றும் சகோதர உணர்ச்சிக்கான அமைப்பு Organisation of Understanding & Fraternity) இவ்விருதை வழங்கியது.



செப்டம்பர் 21-ஆம் தேதி தில்லியில் ஆந்திர பிரதேஷ் பவனில் நடைபெற்ற விழாவில் இவ்விருதை அன்னை மதரசா வழங்கினார் என தில்லி அமைப்பின் தலைவர் சஞ்சய் டால்மியா தெரிவித்துள்ளார்.

சிரிப்புப் படம்

சுயரூபம்

நன்றி : குங்குமம் 2-8 2/1990

(கிளு கிளு போனஸ்)



'தாமரை நெஞ்சம்' சினிமாவில் ஜமினி கணேசனும் சரோஜாதேவியும் 'இது போல' சந்தித்துக் கொள்வார்கள்.

சினியா, தொலைக்காட்சி வானொலி, சின்னத்திரை, நாடகம் முதலியவற்றில் படக்கருத்து பாடல், வசனம், காட்சிகள் நூலகப் பற்றி வந்தள்ளன

வாசகர்கள் புகைப்படத்துடன் விவரங்கள் எழுதலாம்

—ஆசிரியர்





நூலகம்

இலக்கியம்





மாத இதழ் வெளியீட்டு விழா



NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly October, 1995
Regd No. TN / MS (N) / 922 R.Dis 4441 / 95.E.

GAJENDRA ENTERPRISES
209/6, LINGHI CHETTY STREET, MADRAS - 600 001.
PHONE : OFFI : 5224450, 518105 RESI : 420851